**தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகம்**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஜுன் 15 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஜுன் 14 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணலின் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பிடல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 10.1 பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான 06 ஆம் இலக்க வழிகாட்டியின் 3.1 பந்திக்கு முரனாக மாவட்ட செயலகத்திற்குரிய திறைசேரி புத்தகங்களில் குறிப்பிடப்படும் கூட்டுத்தொகை ரூபா 8,278,629 ஆன வருமானம் நிதி செயலாற்றல் கூற்றில் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாமல் பொறுப்பேற்பதாக. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 10.1 பநிதியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான 06 ஆம் இலக்க வழிகாட்டியின் 3.1 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றது

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டு இறுதியில் இணைந்த பரீட்சை மீதி பிரகாரம் ஆண்டின் ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 236,984,344 ஆன போதும், நிதி செயலாற்றல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 271,696,668 ஆக | எதிர்வரும் நிதி ஆண்டில் சரி செய்வதாக. | வித்தியாசத்திற்காக சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்டதில் ரூபா 34,712,324 இனால் ஏனைய பெறுவனவுகள் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | ஒரு செலவு விடயத்தில் ரூபா 823,093 ஆன செலவு குறைத்தும் இன்னுமொரு செலவு விடயத்தில் ரூபா 8,471 ஆன செலவு கூடுதலாகவும் நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாமல் பொறுப்பேற்பதாக. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 10.1 பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான 06 ஆம் இலக்க வழிகாட்டியின் 3.1 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 நிதி நிலைமை கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதி நிதி நிலைமை கூற்றில் காணி, கட்டிடங்கள், இயந்தி உபகரணங்கள் மற்றும் நடைமுறை வேலை மீதிகளின் கூட்டுத்தொகை அத்திகதியில் திறைசேரியின் திரண்ட நிதியல்லாத சொத்துக் கணக்கறிக்கையின் இணைந்த கணக்கு பொழிப்பின் நிலையான சொத்து பேரேடுகளில் மற்றும் மாவட்ட செயலகத்தினால் மேலும் பிரதேச செயலகங்களினால் சமர்பிக்கப்பட்ட பேரேட்டு நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்களில் (ஏசீஏ 6) மீதிகளுடன் இணக்கம் செய்கையில் முறையே ரூபா 32,953,600 ஆன, ரூபா 38,953,502 மற்றும் ரூபா 5,710,399 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் நிதி ஆண்டில் சரி செய்வதாகவும், அச் சரியாக்கல் தொடர்பாக பிரதேச செயலகங்களிற்கு ஆலோசனை வழங்க குறித்துக் கொண்டதாகவும். | வருடாந்த நிதிக்கூற்றுகள் தயாரிக்க கூடியவகையில் சிரயாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைக்களை பேணிக் கொள்ளவும் ஒப்பிடுவதனூடாக சரியான தன்மையை உருதி செய்தலையும் மேற்கொள்ள வேண்டும். |

## 1.6.4 காசு பாய்ச்சல் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் பராதீனத்தினால் கிரயம் ரூபா 544,543 அகற்றப்பட்ட போதும் அச் சொத்துக்களை விற்பதனூடான உண்மையான காசு உள்வரவை இனங்கண்டு காசு பாய்ச்சல் கூற்றில் மூதலீட்டு செய்பாடுகளுடனான காசு உள்வரவின் கீழ் குறிப்பிடப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டு வருமானங்களை இனங்கண்டு உரிய விதத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | சொத்து விற்பனையூடான காசு, காசு பாய்ச்சல் கூற்றில் மூதலீட்டு செயற்பாடாக குறிப்பிட வேண்டும். |
| (ஆ) | நிதி செயற்பாடுகளுடனான சாசு உள்வரவுகளின் வைப்பு பெறுவனவுகளின் கீழ் வெளிப்படுத்த வேண்டிய கடந்த ஆண்டிற்காக மீளாய்வாண்டு காசாக கிடைத்த ரூபா 108,030 செயற்பாட்டு நடவடிக்கைகளுடனான காசு உள்வரவில் வேறு தலைப்பிற்காக சேர்க்கப்பட்ட வருமானத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் தீர்த்திருந்த இவ் வைப்பு மீதி தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதிக்கான வைப்பு கணக்கு தொடர்பான கூற்றில் (ஏசீஏ 4) வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் நிதி ஆண்டில் சரி செய்ய பொறுப்பேற்பதாக. | வைப்பு கிடைப்பனவு காசு பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளாக குறிப்பிட வேண்டும். மேலும் நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |

## 1.6.5 சிறு செலவு கட்டுநிதி இணக்கக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறு செலவு கட்டுநிதி இணக்கக் கணக்கில் வரவு வைக்க வேண்டிய வகைகளின் கூட்டுத்தொகையில் ரூபா 1,324,439 ஆன வித்தயாசமும், செலவு வைக்க வேண்டிய வகைகளில் ரூபா 25,923,877 ஆன வித்தியாசமும் அவதானிக்கப்பட்டன. | எதிர்வரும் நிதி ஆண்டில் சரி செய்வதாக. | வித்தியாசத்தை இணக்கஞ் செய்து சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.6 பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்பு பதிவேடொன்று பேணப்படாததால் ரூபா 3,076,466 பெறுமதியான பொறுப்புக்கள் தொடர்பாக கணக்காய்விற்கு உருதியாகவில்லை. | பொறுப்புக்களின் அறிக்கை ஒன்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக. | நிதிப்பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்பு பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 278 தலைப்பிற்காக திட்டம் பிரகாரம் கோரிய கட்டுநிதியிலும் ரூபா 2,149,795,347 குறைவாக கட்டுநிதி கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 03 வேலை திட்டங்களின் கீழ் கைச்சாத்திட்ட தொகை ரூபா 99.6 மில்லியனான 150 கருத்திட்டங்களில் 149 இன் வேலைகள் பூர்த்தியாகியுள்ள போதும், முற்பணம் இல்லாததன் காரணமாக 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் ரூபா 88 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்ய இயலாதிருந்தது. | போதிய கட்டுநிதி கிடைக்காததன் காரணமாக இக் கருத்திட்டங்களிற்காக கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளதாக. | திறைசேரியுடனான நெருங்கிய தொடர்புகளுடன் கட்டுநிதி முகாமைத்துவத்தை சரியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(அ) பந்தி பிரகாரம் ஆளணி சம்பளம் மற்றும் படிகள் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகளிற்கு வருடாந்த பாதீட்டு எல்லையினுள் கடப்பாடுகளை இனங்காண வேண்டிய போதும், எல்லையை மீறி கூட்டுத்தொகை ரூபா 2,183,376 ஆன கடன்பாடுகளிற்கு உட்பட்டிருந்தது. | ஆண்டு முடிவின் பின்னர் செலவுகள் இனங்காணப்பட்டதால் அச் செலவுகள் கடப்பாடாக குறிப்பிடப்பட்டதாக. | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த பாதீட்டு எல்லையினுள் கடப்பாடுகளை இனங்காண வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 16 பிரதேச செயலகங்களிற்கு ஏனைய 40 அமைச்சுக்கள்/ திணைக்களங்களில் இருந்து 82 சந்தர்பங்களில் வழங்கிய ரூபா 400.8 மில்லியன் நிதியேற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 138 மில்லியன் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அம் மீதி மொத்த நிதியேற்பாட்டின் 5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சலவை கொண்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக வேலைதிட்டங்களை மேற்கொள்ள மற்றும் செலவு மேற்கொள்ள முடியாதிருந்தமை, பட்டியல்கள் சமர்பிக்கப்படாமை, முற்பணம் கிடைக்காமை, அனைத்து பட்டியல்களும் செலுத்தி முடித்த பின்னர் எஞ்சிய பணம் காணப்பட்டமை காரணமானது என. | குறித்த வரிசை அமைச்சு/திணைக்களம் மற்றும் திறைசேரியுடன் ஆரம்பம் முதலே தொடர்சியான தொடர்புகளுடன் செயற்பட்டு கருத்திட்டங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை உச்ச மட்டத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளுக்கு இணங்க மாவட்ட செயலக நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உருதிசெய்ய வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வதன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க தேவையான மாற்றங்கள் செய்ய வேண்டுமெனவும், அம் மீளாய்வுகளை ஆவணரீதியாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொண்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் காணப்படும் நிலைமை தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் மீளாய்வு செய்து அதன் பிரதியை கணக்காய்விற்கு சமர்பிகப்பதாக. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 571 | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலங்கள் 12 இற்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 38,304,767 பெறுமதியான 83 வைப்புகள் தொடர்பில் தொடர்புடைய பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முற்பணம் போதியளவு இல்லாமை, பட்டியல்கள் சமர்பிக்கப்படாமை, குறித்த அறிக்கை கிடைத்தவுடன் நிறுத்தட் பணத்தை விடுவிப்பதாக, அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக, எதிர்காலத்தில் செலுத்த நடடிக்கை எடுப்பதாக எனும் வகையில் பதில் வழங்கியுள்ளமை. | நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பிரிவு | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலங்கள் 11 இற்குரிய 30 வாகனங்கள் தொடர்பில் குறித்த ஏற்பாடுகள் பிரகாரம் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கையின் 3.1 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 05 பந்தி | 07 பிரதேச செயலகங்களினால் நிறுவனத்தின் செயல் நடவக்கை திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள நிறுவன ஆளணியை பயன்படுத்தும் முறை பற்றி மற்றும் தேர்ச்சி இடைவெளியை இனங்கண்டு அவ் இடைவெளியை குறைத்து கொள்ளக் கூடிய வகையில் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்க ஆலோசனை வழங்கியுள்ளதாக. | சுற்றறிக்கையின் 05 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2012 ஜனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை<br>------------------------------- | | | |
| (i) | 3.2 பிரிவு | தகைமையை பரிசோதித்து உருதி செய்ததன் பின்னர் சமுதாய அடிப்படை அமைப்பிற்கு நிர்மாணம், வேலைகள், ஒப்பந்தங்களை கையளிக்க முடியுமான போதும், அவ் ஏற்பாடுகளிற்கு முரனாக 02 பிரதேச செயலகங்களில் கிரயம் ரூபா 2,544,483 பெறுமதியான 04 வேலைகள் தொடர்பில் போதிய நிதி இயலுமை இல்லாத சமுதாய அடிப்படை அமைப்பிற்கு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. | நிவிதிகல பிரசேத செயலகத்திற்குரியதாக, கடன் அடிப்படையின் கீழ் கருத்திட்டத்தை செயற்படுத்துவதாக வாக்கு மூலம் வழங்கியதாலும் வேறு செயற்பாட்டு சங்கமொன்று இல்லாததாலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதாகவும் அயகம பிரதேச செயலகத்திற்குரியதாக வங்கி கணக்குகளின் நிதி இயலுமையை பரிசோதிப்பது போன்ற பதில்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் 3.2 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 3.2 (iv) பந்தி | இபுல்பே பிரதேச செயலகத்திற்குரியதாக ரூபா 4,840,393 பெறுமதியான 09 கருத்திட்டங்கள் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு முரணாக துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன. | அவ்வாறான துணை ஒப்பந்தங்களை வழங்கியமை தொடர்பில் அறிக்கையிடப்படவில்லை எனவும், கருத்திட்டங்களை துணை ஒப்பந்தம் வழங்க முடியாது என வாக்கு மூலமொன்று பெற்றிருப்பதாகவும். | சுற்றறிக்கையின் 3.2 (iv) பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 பிரிவு | பெறுகைகள் நிறுவனத்தினால் விலை மனு கோருவதனூடாக பொருத்தமான மனுதாரரை தெரிவு செய்ய வேண்டிய போதும், 03 பிரதேச செயலகங்கள் அவ் ஏற்பாடுகளிற்கு முரனாக 06 வாகனங்களை ரூபா 378,473 பெறுமதியான சேவை நடவக்கைகளுக்கு கொடுப்பனவு செய்திருந்தது. | தரமான சேவையை வழங்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரே சேவை நிலையத்திலிருந்து வாகன சேவையிடலை மேற்கொண்டதாகவும், பிரதேச செயலாளரின் ரூபா 25,000 அதிகாரமளித்தல் எல்லையின் கீழ் டென்டர் கோராது சேவையிடலை மேற்கொண்டதாக போன்ற வகையில் பதில் வழங்கப்பட்டுள்ளது. | 2006 அரச பெறுனர் வழிகாட்டிக் கோவையின் 3.4 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2011 பெப்ரவரி 10 ஆந் திகதிய தே.க.ஆ.நி 2011/01 இலக்க இடர் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கையின் 3 பந்தி | மண்சரிவு அபாய மாவட்டங்கயில் கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனத்திடம் இருந்து தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்திடமிருந்து குறித்த தகைமை சான்றிதழ்/ பரிந்துரை கட்டாயம் பெற வேண்டிய போதும், இரத்தினபுரி பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 34,913,401 ஆன 02 நிர்மாணங்கள் தொடர்பில் அவ் ஏற்பாடுகள் பிரகாரம் நடடிகசை எடுத்திருக்கவில்லை. | குறித்த ஆரம்ப நிர்மாணம் 2016 ஆண்டு மேற்கொண்டதாகவும் அதன் போது தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்திடமிருந்து பரிந்துரை பெற வேண்டிய தேவை இருக்கவில்லை எனவும், தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் வாய்மூல ஒருமைப்பாட்டுடன் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டதாவும் அதற்குரிய எழுத்து மூல ஒருமைப்பாட்டின் பிரதியொன்றை எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்பிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2011 பெப்ரவரி 10 ஆந் திகதிய தே.க.ஆ.நி 2011/01 இலக்க இடர் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கையின் 3 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 03 பந்தி | தமது பிரிவில் ஓய்வு பெற்ற ஒருவர் மரணித்தால் 07 நாட்களினுள் ஓய்வூதிய இலக்கத்துடன் அது பற்றி உடனடியாக பிரதேச செயலகத்திற்கு பிரிவு பொறுப்பு கிராம அலுவலரினால் அறிவிக்க வேண்டிய போதும், அவ்வாறு செய்யாததனால் 05 பிரதேச செயலகங்களிற்குரிய 33 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு செலுத்திய ரூபா 1,258,277 ஆன ஓய்வூதிய தொகை அறவிட வேண்டியிருந்தது. | இது தொடர்பாக கிராம அலுவலர் அறிவூட்டப்பட்டுள்ளதாகவும், மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எதர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்து நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டள்ளது. | சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2020 திசெம்பர் 21 ஆம் திகதிய 2020/02 ஆம் இலக்க இரத்தினபுரி பிரதேச செயலாளரின் உள்ளக கணக்காய்வு ஆலோசனை கடிதத்தின் 02 பந்தி | ஆண்டினுள் செயற்படுத்தும் கருத்திட்டங்களின் கொன்கிரீட் பொழிப்பு தன்மையை பரீட்சிப்பதற்கு மொத்த கருத்திட்டங்களின் குறைந்தபட்சம் 25 சதவீதத்திற்கு ஹெமர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியதுடன், ஒவ்வொறு ஒப்பந்தக்காரரிடமிருந்தும் குறைந்தபட்சம் ஒரு கருத்திட்டம் உள்ளடங்கும் வகையில் தெரிவு மேற்கொள்ள வேண்டும். அவ்வாறாயினும் ஒரு கருத்திட்டமாவது ஹெமர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத 10 ஒப்பந்தக்காரர்களானதுடன் அவர்களுடன் கைச்சாத்திட்ட கருத்திட்டங்கள் 18 ஆகும். அவற்றின் பெறுமதி ரூபா 10,479,208 ஆனது. | நான்கு பிரதேச செயலங்களிற்கு ஒரு ஹெமர் இயந்திரம் மாத்திரம் இருத்தல், நிலவிய அதிக மழை காரணமாக பாதைகள் நீரில் நளைந்து காணப்படல் போன்றவை காரணமானதாக. | உள்ளக கணக்காய்வு ஆலோசனை கடிதத்தின் 02 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.6 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஜுன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 1 பிரிவின் 3.1 பந்தியின் நிதிப் பிரமாணம் 113(6)(ஆ) எனும் ஆலோசனை பிரகாரம் அரச ஊழியர்களின் முற்பண "பீ" கணக்கு மூலம் வழங்கிய கடன் மற்றும் முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறாயினும் இடம் மாரிச் சென்ற 02 அலுவலர்களிற்கும், கடன் தொகையை செலுத்தி முடிக்க முன்னர் ஓய்வு பெற்றுள்ள 07 அலுவலர்களிற்கும், சேவையை விட்டுச் சென்று 05 மாதம் முதல் 15 மாதங்களை விஞ்சிய 03 அலுவலர்களிற்கும், மரணித்து 04 மாதங்களை விஞ்சிய ஒரு அலுவலரிற்கும், இறுதி தவனையை அறவிட்டு 03 மாதம் முதல் 12 | தொடர்புடைய அலுவலர்களிற்கு செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவித்தாகவும் எதிர்காலத்தில் தீர்ப்பதாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் கடன் மீதிகள் தொடர்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளை விஞ்சியிருந்த வேலை நீக்கம் செய்யப்பட்ட 05 அலுவலர்களிற்கும், 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த சுகையீனம் காரணமாக சேவையிற்கு சமுகமளிக்காத ஒரு அலுவலரிற்கும் செலுத்தியிருந்த ரூபா 2,303,305 தொடர்பில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**2.7 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 பிரதேச செயலங்கள் தொடர்பாக 109 வேலைகளிலிருந்து பெற்ற நிறுத்தற் பணம் ரூபா 6,335,702 குறைபாட்டு உத்தரவாத கால எல்லையை கடந்து கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 02 திகதியளவில் 06 மாதம் முதல் 34 மாதம் கடந்திருந்த போதும், அதனை விடுவிக்காது தொடர்ந்தும் பிரதேச செயலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், கொடுப்பனவு செய்ய போதிய முற்பணம் கிடைக்காமை போன்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. | குறைபாட்டு உத்தரவாத கால எல்லையை கடந்துள்ள நிறுத்தற் பணத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**3.1 எதிர்பார்த்த வேலைகளிற்கு முரணான நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 2019 திசெம்பர் 06 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க அபிவிருத்தி சுற்றறிக்கையின் 04 பந்தி பிரகாரம் இளைஞர் யுவதிகள் மற்றும் பெண்கள் மத்தியில் சுயதொழிலை உருவாக்க உதவும் கருத்திட்டங்கள் போன்று குறைவருமான மக்களின் வருமான வழிகளை மேம்படுத்த உருதுணையாகும் கருத்திட்டங்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். எனினும் 17 பிரதேச செயலக பிரிவுகளில் 575 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இவ்வாறு விஷேட கவனம் | உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியுடன் விவசாயம், சுயதொழில் உருவாக்கம் போன்ற வேலைத் திட்டங்கள் நடைமுறைபடுத்த வேண்டுமெனவும் அதற்காக விஷேட நிகழ்சி திட்டங்கள் செயற்படுத்த வேண்டும் எனவுமாகும். அவ்வாறு இல்லாது பொது வேலைத் திட்டங்கின் கீழ் இத் துறைகளையும் உள்ளடக்க ஆலோசனை | எதர்வரும் அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துகையில் முன்னுரிமை வழங்க வேண்டிய துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்படாது ரூபா 1259.98 மில்லியன் ஆன 2291 பௌதீக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்திய காரணத்தால் கிராம மக்களின் தொழில் மற்றும் சீவனஉபாய சந்தர்ப்பங்களை முன்னேற்ற கனிசமான பங்களிப்பு இடம் பெறவில்லை என அவதானிக்கப்பட்டது. | வழங்கிய போதும் கிராம குழுக்களில் இடம் பெறுவது பெறும்பான்மையினரின் தேவையான கிராம பாதை முன்மொழிவு முன்வைக்கப்படுவதுமாகும். | |

### 3.2 கடமைகள் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதியன்று அரச காணிகளிற்காக அனுமதிப்பத்திரம்/ ஒப்படை பத்திரம் விநியோகிக்கையில், 04 பிரதேச செயலகங்களில் காணிக் கச்சேரி நடத்தாமை, 07 பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட காணி கச்சேரிகளின் எண்ணிக்கை 01 முதல் 07 வரையான குறைந்த அளவை கொண்டுள்ளமை, 08 பிரதேச செயலகங்களிற்குரிய அனுமதியற்ற காணிகளை ஒழுங்கமைக்க உள்ள காணி பகுதிகளின் எண்ணிக்கையின் ஒழுங்கமைக்க காணிகளை இனங்காணமையும், இன்னொரு பிரதேச செயலகத்தினால் பிரிவுற்குரிய அரச காணிப் பகுதிகளின் எண்ணிகை மற்றும் அனுமதியற்ற காணி ஓழுங்கமைக்கவுள்ள காணப் பகுதிகள் தொடர்பான தகவல்களை குறிப்பாக இனங்கண்டிருக்காத காரணத்தால் இரத்தினபுரி மாவட்டத்தினுள் அனுமதியற்ற காணி ஒழுங்கமைக்கும் செயற்திட்டம் மெதுவான வேகத்தை கொண்டிருந்தது. மேலும் இது தொடர்பாக காணி ஆணையாளரின் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 இன் 2008/04 இலக்க சுற்றறிக்கையின் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை பின்பற்றி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அரச காணிகளிற்காக அனுமதிப்பத்திரம்/ ஒப்படை பத்திரம் விநியோகிக்கும் செயற்பாடு பிரதேச செயலாளரினால் தனியாக மேற்கொள்ளும் செயற்பாடு இல்லை எனவும், அதற்காக தொடர்புடைய ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பின் மீது தாமதங்கள் ஏற்படுவதாகவும். | அனுமதியற்ற காணி ஒழுங்கமைக்கும் செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ளாமை**

இரத்தினபுரி மாவட்டத்தில் புதிய சமுர்த்தி உதவி வேலை திட்டத்திற்காக 54,489 விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் அவ் விண்ணப்பங்களை மீளாய்வு செய்து முன்னுரிமை ஒழுங்கில் 39,199 நலன்பெறுனர்களை தேர்ந்தெடுத்திருந்ததுடன், அதன் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 31 திகதி 24,715 நலன்பெறுனர்களுக்கு உருதி சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரிவிலுள்ள மிகப் பொருத்தமான மற்றும் முன்னுரிமை விண்ணப்பதாரர்களை தெரிவு செய்து அவர்களிற்கு சமுர்த்தியுதவி உரிமை பத்திரம் வழங்க வேண்டிய போதும் இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பிரதேச செயலப் பிரிவுகளில் உரிமை பத்திர உடமையாளர்களை தெரிவு செய்கையில் முன்னுரிமை பதிவேட்டின் கீழிருந்து 6,949 நலன் பெறுனர்கள் அதாவது, 27 சதவீதத்திற்கு மற்றும் அதற்கிடையில் 07 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முன்னுரிமை பதிவேட்டை எவ்விதத்திலும் கவனத்திற் கொள்ளாது முன்னுரிமை பதிவேட்டின் கீழுள்ள 137 நலன்பெறுனர்களிற்கு சமுர்த்தியுதவி உரிமை பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அடிப்படையாகக் கொண்ட பிரமாணங்கள் மீது கிராம குழுவினால் வறுமைக்கேற்ப ஒழுங்கமைக்கப்பட்ட பெயர் பட்டியலின் ஆரம்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அமைச்சினால் அனுப்பப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்படாத 101 சந்தர்ப்பங்கள் கணக்காய்வு மாதிரி பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக மீளாய்வு செய்து தேவையான செயற்பாடுகளை 2021 மார்ச் 31 திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை. | முன்வைக்கப்பட்ட அவதானங்களுடன் இணங்குவதாகவும், முன்னுரிமை ஒழுங்கிற்கு ஏற்ப பிரதேச செயலங்களினால் கிடைத்த அனைத்து பெயர் பட்டியல்களும் மாவட்ட அலுவலகத்தினால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவற்றிலிருந்து உரிமை பத்திர உடமையாளர்கள் பிரதான அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்டதாக. | முன்னுரிமை ஒழுங்கிற்கேட்ப நலன்பெறுனர்களை தெரிவு செய்து சமுர்த்தியுதவி வேலைத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | பிரிவின் எந்தவொறு குடும்பத்திற்கும் புதிதாக உதவி உரிமை கிடைக்காத மற்றும் அவ்வாறு கிடைக்காமைக்கு தெளிவான தர்க்க ரீதியான காரணங்கள் இன்றி வறுமையுடன் கூடிய மக்கள் வசிக்கும் 04 கிராம அலுவலர் பிரிவுகள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், முன்னுரிமை வழங்க வேண்டிய அப்பிரிவுகள் தொடர்பில் கவனம் | முன்வைக்கப்பட்ட அவதானங்களுடன் இணங்குவதாகவும், முன்னுரிமை ஒழுங்கிற்கு ஏற்ப பிரதேச செயலங்களினால் கிடைத்த அனைத்து பெயர் பட்டியல்களும் மாவட்ட | முன்னுரிமை ஒழுங்கிற்கேட்ப நலன்பெறுனர்களை தெரிவு செய்து சமுர்த்தியுதவி வேலைத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தாது பரிந்துரைக்கப்பட்ட அனைத்து குடும்ப அலகுகளிற்கும் உதவி உரிமைபத்திரம் வழங்கப்பட்ட 57 பிரிவுகள் அவதானிக்கப்பட்டன. | அலுவலகத்தினால் சமுர்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவற்றிலிருந்து உரிமை பத்திர உடமையாளர்கள் பிரதான அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்டதாக. | |

**3.4 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்ய எதிர்பார்த்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,087,738 ஆன 06 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன. | நிலவிய அதிக மழை காரணமாகவும், பண்டங்களின் போக்கு வரத்தில் ஏற்படும் அசௌகரியங்களினாலும், கொவிட் - 19 தொற்று காரணமாகவும், காலம் போதாமையும் எனும் காரணங்கள் காட்டப்பட்டிருந்தன. | உரிய கால எல்லையில் கருத்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் திட்டங்களை முறையாக தயாரித்து கால எல்லைகளை உள்ளடக்கி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 கருத்திட்டங்கள் மேற்கொள்வதன் தாமதம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 பிரதேச செயலக பிரிவுகளிற்குரிய கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு பூர்த்தி செய்ய திட்டமிட்ட மதிப்பீட்டு கிரய கூட்டுத் தொகை ரூபா 76.1 மில்லியனான 02 கருத்திட்டங்களில் நிர்மாணப்பணி தாமதம் காரணமாக அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் மீதி ரூபா 22.9 மில்லியன் அல்லது 30 சதவீதமானது. | காணி உரிமையாளர்கள் அவ்வப்போது எதிர்பு காட்டியமை, அதிக மழை, கொவிட் - 19 தொற்று நிலமை, பொழிப்பு சக்தியை அளவிட போதிய காலம் இல்லாமை, தற்போது ஓரளவு பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்ய நடவக்கை எடுத்துள்ளதாக என்பதாக கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய கால எல்லையில் கருத்திட்டத்தை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் திட்டங்களை முறையாக தயாரித்து கால எல்லைகளை உள்ளடக்கி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடந்த 04 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டில் 16 பிரதேச செயலகங்களிற்குரியதாக மாவட்டத்தில் மாற்று காணிகள் வழங்க இனங்கண்ட கும்பங்களின் எண்ணிக்கை 2037 ஆன போதும், மீளாய்வாண்டு இறுதியில் அவற்றில் தகைமையான காணிகள் வழங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை 1151 அல்லது மொத்தத்தின் 57 சதவீதமாகும். | காணிகளை சுவீகரிக்க நீண்ட காலம் எடுத்தல், தகைமையான காணிகள் இல்லாமை, சுவீகரித்த காணிகளில் வசிக்க நலன்பெறுனர்களின் விருப்பமின்மை, பொருத்தமான காணி அல்லது வீடுகளுடன் கூடிய காணிகளை தேடிக் கொள்ள நலன்பெறுனர்களின் தாமதங்கள் போன்ற விடயங்கள் காரணமானதாக. | தற்போது சுவீகரித்துள்ள காணிகளின் அளவை அறிக்கையை விரையில் பெற்று எஞ்சிய கனிசமான எண்ணிக்கையிலான குடும்பங்களிற்கேனும் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த 04 ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 18240 ஆனதுடன் வழங்க வேண்டியிருந்த மொத்த இழப்பீடு ரூபா 1,095,644,890 ஆன போதும், 2020 திசெம்பர் 31 திகதியன்று மேலும் வழங்க வேண்டியிருந்த பணம் ரூபா 362,553,915 ஆக காணப்பட்டது. | தேசிய காப்புறுதி நிதியத்திற்கு சமர்பித்துள்ள இழப்பீடு இது வரை கிடைக்காமை, பிரதேச செயலக பிரிவுகளின் மதிப்பீட்டு குழுவினால் மேற்கொள்ளும் மதிப்பீட்டு பெறுமதி, தேசிய காப்புறுதி நிதியத்தினால் திருத்துதல் அல்லது மதிப்பிட்ட மொத்த இழப்பீடும் கிடைக்காமை என்பதாக காரணம் குறிப்பிடப்பட்டிருந்தது. | திறைசேரி மற்றும் குறித்த வரிசை அமைச்சுடன் கிட்டிய தொடர்புகளுடன் குறித்த இழப்பீட்டை விரைவில் செலுத்த கூடிய வகையில் செயற்பாடுகளை திட்டமிட வேண்டும். |

**3.6 பெறுகைகள்**

-----------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 பிரதேச செயலகங்களில் 02 அபிவிருத்தி வேலைத் திட்டங்களிற்கு உரியதாக ஒழுங்கான தொழிநுட்ப முறைமையை கையாண்டு நியம பொழிப்பு சக்தியுள்ளதாக என உருதி செய்து கொள்ளாது கொன்கிரீட் கலவை பரப்பி நிர்மாணித்த 17 பாதைகளின் 736.49 கன மீட்டர் ($m^3$) கொன்கிரீட்களிற்கு ரூபா 13,578,524 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பாதை நிர்மாணிக்கும் காலப் பகுதியில் பாதையின் பொழிப்பு சக்தியை பரிசோதிக்க பயன்படுத்தும் இயந்திர வசதி இல்லதிருந்தமை. | பாதை நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்கையில் நியம பொழிப்பு சக்தி காணப்படுகினறதா என உருதி செய்து கொள்ள வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இபுல்பே பிரதேச செயலகத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட ஹெமர் பரிசோதனை 131 இனுள் உடன்படிக்கை செய்த பெறுமதி ரூபா 3,394,059 ஆன 06 பாதைகளின் பரிசோதனைகள் தோல்வியடைந்து இருந்ததுடன், அப் பாதைகளிற்கு core cutter பரிசோதனை செய்து பெறுபேற்றை உருதி செய்து கணக்காய்வு திகதியாகிய 2021 பெப்ரவரி 01 வரையும் முன் நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் ஹெமர் பரிசோதனை தோல்வியடைந்த 06 கருத்திட்டங்களில் 05 இனது நிர்மாணப் பணிகள் ஒரே துணை ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்டள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | core cutter பரிசோதனை மேற்கொள்ளுமாறு குறித்த சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டள்ளத ாக. | அப் பாதைகளிற்கு core cutter பரிசோதனை மேற்கொண்டு பேறுபேற்றை உருதி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரத்தினபுரி மாவட்டத்தில் இபுல்பே பிரதேச செயலகத்தினால் நிர்மாண கருத்திட்டங்களிற்காக சீமேந்து போக்குவரத்து செய்கையில் கிட்டிய இடம் காணப்பட்ட போதும் (வியாபார நிலையம்/ஹார்ட்வெயார்) அது தொடர்பில் கவனம் செலுத்தாது பலங்கொட நகரிலிருந்து போக்குவரத்து செய்தமையால் கணக்காய்வு மாதிரி பரிசோதனைக்குட்படுத்திய 51 வேலைகளிற்காக கொடுப்பனவு செய்கையில் போக்குவரத்து கிரயம் ரூபா 525,347 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்வரும் அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக மதிப்பீடு தயாரிக்கையில் இது தொடர்பாக கவனத்தில் கொள்வதாக. | அரச வேலைகளை மேற்கொள்ளும் போது சிக்கனம் பற்றி விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நிதிப் பிரமாணம் 156(i) பிரகாரமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | சாத்தியப்பாட்டு ஆய்வின் போது மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் போது பாதையில் பயன்படுததும் வாகன வகை, போக்குவரத்து செய்யும் பண்டங்கள், மண்ணின் தன்மை மற்றும் வெள்ள அனர்த்தங்களிற்குட்படல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்ட வேலை பெறுமதிகளின் கூட்டுத் தொகை ரூபா 8,485,620 ஆன 07 பாதைகளின் பாதை மேற்பரப்பு பழுதடைவதற்கு காரணமாக இருந்தன. | பார எல்லைகளை மீறி வாகன போக்குவரத்து செய்தல், வெள்ளத்தில் அமிலும் பிரதேசமாதல் போன்ற பதில்கள் முன்வைக்கப்பட்டுள்ள ன. | சாத்தியப்பாட்டு ஆய்வின் போது முக்கிய கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் உரிய கவனத்துடன் செயற்பட வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுனர் வழிகாட்டிக் கோவையின் 3.9.2 வழிகாட்டி பிரகாரம் ரூபா இரண்டு மில்லியனை (ரூ. 2,000,000) விஞ்சாத கருத்திட்டங்கள், சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு நேரடியாக ஒப்பந்தம் வழங்குவதில் மற்றும் 3.9.4 வழிகாட்டி | கிராம அபிவிருத்தியின் போது போட்டி விலை மனு கோரலினூடாக அரசிற்கு பணம் சேமிப்பதைவிட | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுனர் வழிகாட்டிக் கோவையின் 3.9.2 மற்றும் 3.9.4 வழிகாட்டி பிரகாரம் அரசிற்கு அதிக நன்மை பயக்கும் |

| | | |
|---|---|---|
| பிரகாரம் அங்கரிக்கப்பட்ட சங்கங்களிலிருந்து மற்றும் மாவட்ட செயலாளரினால் பதிவு செய்துள்ள ஏனைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனு கோரல் எனும் 02 மாற்று பெறுனர் முறைகள் பற்றிய தெளிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 3.9.4 வழிகாட்டி தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி போட்டியினூடாக அரசிற்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த பொருளாதார நன்மைகள் தொடர்பில் கவனமெடுக்காது 17 பிரதேச செயலங்களிலும் 02 அபிவிருத்தி கருத்திட்டங்களின் கீழ் நேரடியாக பொறியியலாளிரன் வீதங்களிற்கு ரூபா 02 மில்லியனை விஞ்சாத கூட்டுத் தொகை ரூபா 1279.51 மில்லியனான 2299 கருத்திட்டங்கள் நேரடியாக சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு வழங்கப்பட்டிருந்தன. | கிராம மக்களிற்கு உச்ச நலனை பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வகையில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டும். |

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி பிரதேச செயலக பிரிவிற்குரிய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிடமிருந்து கிடைத்த ஒதுக்கீட்டின் மீது ரூபா 33,933,472 செலவில் இரத்தினபுரி ஸ்ரீ பலாபத்தல நகரில் ஸ்ரீபாத ஓய்வு மண்டபம் 2019 ஜனவரி 15 திகதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு 2019 ஏப்ரல் மாதம் 03 திகதி மக்கள் பொறுப்பில் கையளிக்கப்பட்ட போதும், வழிபாட்டாலர்களிற்கு தங்குமிட வசதிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்காததால் கணக்காய்வு திகதிய 2020 திசெம்பர் மாதமளவிலும் உத்தேச நோக்கத்திற்கு பயன்படுத்தாது விளைவற்று நிலவியது. | கொரோனா தொற்று நிலமை காரணமாக இக் கட்டிடத்தை ஸ்ரீபாத வழிபாட்டாலர்களிற்கு திறக்கப்படவில்லை என. | குறித்த ஆதனத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டியதுடன் அரச ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 11 பிரதேச செயலக பிரிவுகளில் 1999 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாத 44 அரச கட்டிடங்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்குரிய 02 வருடங்களாக பயன்படுத்தப்படாத 04 அரச கட்டிடங்களை பயனுள்ள வேலைகளிற்கு பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படாததுடன் கணக்காய்வு திகதிய 2021 பெப்ரவரி 04 அளவிலும் கட்டிடம் பழுதடைந்த நிலையில் காணப்பட்டமை, புற்கள் முளைத்து அழிவடைந்து காணப்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | இரத்தினபுரி பிரதேச செயலகத்திற்குரிய கட்டிடங்களை திருத்தி பயனுள்ள வேலைகளில் ஈடுபடுத்துமாறு குறித்த நிறுவனங்களிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதாக, ஏனைய பிரதேச செயலகங்களினால் இக்கட்டிடங்களை எதிர்காலத்தில் பயனுள்ள வேலைகளில் ஈடுபடுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதாக பதில் முன்வைக்கப்பட்டுள்ளது. | - அவ்வாறே - |

**3.8 அரச ஊழியர்கள் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 மற்றும் உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2019 மார்ச் 23 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 பந்தியில் காட்டப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களில் பிணை வைக்க வேண்டிய 18 அலுவலர்களினால் குறித்த பிணை வைப்பை செய்திருக்கவில்லை. | பிணை வைப்பு செய்யுமாறு குறித்த அலுவலர்களிற்கு அறிவித்துள்ளதாக. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 (ii) பிரகாரம் பிணை வைப்பு மேற்கொள்ள வேண்டும். |

## 3.9 சிக்கனமான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலங்கொட பிரதேச செயலக பிரிவில் கிரிதிகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலாவ ஹேன மெதி கிரிந்திவல பாதைப் பகுதி, பலங்கொட நகர சபையுடன் முறையான ஒறுமைப்பாடின்றி மற்றும் சரியான சாத்தியப்பாட்டு ஆய்வின்றி நீளம் 51.77 மீட்டர் அளவு 2017 திசெம்பர் 15 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், இப் பாதையின் ரூபா 105,324 செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப 16.14 மீட்டர் பகுதி மீது மீட்டர் 1.2 ஆகுமாறு மண் இடப்பட்டு அனுமதியின்றி நிரப்பியிருந்ததால் மேற்கொண்ட செலவு விளைவற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பான முன் நடவடிக்கைகளுக்கு நகர சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | அபிவிருத்தி கருத்திட்டங்களை பயனுள்ளதாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இரத்தினபுரி பிரதேச செயலகத்தினால் ரூபா 961,872 செலவில் கடுகஸ்எல்ல விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் வேலைகள் 2019 ஜுலை 28 திகதி பூர்த்தி செய்திருந்ததுடன் 2020 செப்டம்பர் 25 திகதி மேற்கொண்ட கள பரிசோதனையின் போது பராமரிப்பிற்காக வழங்கிய நிறுவனம் (இரத்தினபுரி மாநகர சபை) அல்லது விளையாட்டு கழகத்தினால் பராமரித்திருக்கவில்லை. விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்த பின்னர் விளையாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாது கைவிடப்பட்டிருந்ததுடன் தற்போது உட்பிரவேசிக்கவேனும் முடியாத நிலையில் புற்கள் முளைத்துள்ளன. | பராமரிப்பு நடவடிக்கைகளை படிக்படியாக மேற்கொள்ள நகர சபைக்கு எழுத்து மூலம் அறிவூட்டுவதாக. | நிதிய பயன்பாடு பயனுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) பெல்மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய கரந்தவல பஹல ஹகமுவ விளையாட்டு மைதான அபிவிருத்தி கருத்திட்டம் ரூபா 115,566 வேலை பெறுமதிக்கு 2019 ஜுன் 18 திகதி வேலைகள் பூர்த்தி செய்துள்ள போதும் கருத்திட்டத்தை நியம தரமின்றி நிர்மாணித்ததன் காரணமாக முழு மைதானமும் சேற்றினால் நிரம்பி பயன்படுத்த முடியாத நிலைக்குள்ளாகிருந்தது. அதன் காரணமாக கருத்திட்ட நோக்கம் நிறைவேறியிருக்காததுடன் கருத்திட்டத்தை மேற்கொள்கையில் உரிய மேற்பார்வையொன்று இடம்பெறாமையும் இதற்கான காரணமாக அமைந்ததாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய விடயங்களுடன் இணங்குவதாகவும், தொடரான பராமரிப்பு வேலைகள் தொழிநுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளுமாறு குறித்த விளையாட்டு கழகத்திற்கு அறிவித்துள்ளதாகவும். | குறித்த பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினரை விசாரித்து அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த பொருத்தமான நிலைக்கு மாற்ற முயற்சி எடுக்க வேண்டும். |

**3.10 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆண்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2015 திசெம்பர் மாதமளவிலும் நோக்கத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுத்த இயலாததால் 05 கலாசார மண்டபங்களை நிர்மாணிக்க அக்காலப் பகுதியில் செலவிட்ட ரூபா 12,952,497 தொகை விளைவற்று காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டு இறுதியிலவிலும் நிர்மாணப்பணிகளை பூர்த்தி செய்து நோக்கத்துடனான செயற்பாடுகளில் ஈடுபடுத்த தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | எஞ்சிய வேலைகளை விரையில் பூர்த்தி செய்து குறித்த மத்திய நிலையத்தை பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். |

**3.11 முகாமைத்துவ குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 பிரதேச செயலக பிரிவுகளின் 36 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அரச காணிகளில் உள்ள 33 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள், ஒரு உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் 02 சேவை இல்ல காணிகளின் உரிமையை முறையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பில் முன்நடவடிக்கை செய்து கொண்டிருப்பதாக. | அரச காணிகளின் உரிமையை முறையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 நல்லாழுகை

### 4.1 பொது மக்களிற்காக சேவை வழங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 1.4 வழிகாட்டி பிரகாரம் பிரஜைகள் பிரகடன சேவைகளை நாளாதுவரையாக்குதல், பின்னூட்டல் மற்றும் மதிப்பிடல் மேலும் மேம்படுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதும், 04 பிரதேச செயலகங்களில் 2011 ஆண்டின் பின்னர் அம் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. | இதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 1.4 வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5 மனித வள முகாமைத்துவம்

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் மற்றும் 17 பிரதேச செயலகங்களிற்குரிய 2020 திசெம்பர் 31 திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை உள்ளவாறான ஆளணி எண்ணிக்கையுடன் இணக்கஞ் செய்கையில் 167 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் 02 ஊழியர் மிகையுமானதுடன் அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உயர் மட்ட 12 உத்தியோகத்தர் வெற்றிடங்களில் 02 பிரதேச லெயலாளர் பதவிகள், 04 உதவி பிரதேச செயலாளர் பதவிகள், 04 உதவி பணிப்பாளர் (கொள்கை திட்டமிடல்) பதவிகள், 02 கணக்காளர் பதவிகளும் ஏனைய மட்டங்களின் உத்தியோகத்தர்களில் 06 மொழி பெயர்பாளர் பதவிகள், 08 நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 68 கிராம உத்தியோகத்தர் பதவிகள், 28 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக வெற்றிடங்களை நிரப்பியிருக்காமை, பிரதேச நிர்வாகத்தை ஒழுங்காக மற்றும் வினைத்திறனாக நடாத்திச் செல்ல தடையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்த பதவிகளிற்கு நியமனம் வழங்கல் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதாக. | முக்கிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரண்டாம் மட்ட 18 தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகள், ஒரு திட்டமிடல் களைஞர் பதவி மற்றும் 18 தொழிநுட்ப உதவியாளர் பதவிகளை நிரப்ப தேவையான நடவடிக்கை எடுத்திருக்காமை, மீளாய்வாண்டு 08 அபிவிருத்தி நிகழ்சி திட்டங்களிற்கு ரூபா 1398 மில்லியனான 2320 கருத்திட்டங்களை கிட்டிய மேற்பார்வை செய்ய மற்றும் உரிய தரத்துடன் உரிய காலத்தில் கருத்திட்டங்களை பூர்த்தி செய்ய தடையாக அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்த பதவிகளிற்கு நியமனம் வழங்கல் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதாக. | - அவ்வாறே - |
| (இ) | இரண்டாம் மட்ட அபிவிருத்தி உதவியாளர் ஒரு பதவி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒரு பதவியும் (பழைய) மிகையாக காணப்பட்ட போதும் நிதிப் பிரமாணம் 71 பிரகாரம் அப்பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 71 பிரகாரம் அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக. | நிதிப் பிரமாணம் 71 பிரகாரம் அப்பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |